අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# மனைப்பொருளியல்

## வினாத்தாள் I,II



தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 85 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

| மனைப் பொருளியல் - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

### மனைப் பொருளியல் - I

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. விலங்கு இழையங்களில் காணப்படும் காபோவைதரேற்று

   1. மாப்பொருள் 2. பெக்டின் 3. கிளைக்கோஜன் 4. செலுலோசு

2. புரத கட்டமைப்பில் நைதரசனின் செறிவு வீதம்

   1. 16 % 2. 18 % 3. 20 % 4. 22 %

3. ஒலிவ் எண்ணெயில் அடங்கியுள்ள கொழுப்பமிலம்

   1. லினோலெனிக்கமிலம் 2. லினோலெயிக்கமிலம்
   3. அரக்கிடோனிக்கமிலம் 4. ஒலேயிக்கமிலம்

4. கூட்டுவிற்றமின் என அழைக்கப்படும் விற்றமின்

   1. A 2. B 3. C 4. D

5. X எனும் கனியுப்பின் தொழிற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளது

   - இன்சுலினின் ஒரு கூறாகும்.
   - நொதியங்களின் ஒரு கூறாகும்.
   - விற்றமின் A, காபோவைதரேற்று அனுசேபத்திற்கு உதவும்.

   இவ் X எனும் கனியுப்பு யாது

   1. இரும்பு 2. அயடீன் 3. நாகம் 4. செலனியம்

6. போலிக்கமிலம் எனும் இரசாயனப் பெயர் கொண்ட விற்றமின்

   1. $B_1$ 2. $B_2$ 3. $B_6$ 4. $B_9$

7. முட்டையில் காணப்படும் விற்றமின்கள்

   1. A,$B_2$ 2. B,$B_1$ 3. C,D 4. A,C

8. மரக்கறிகளை வெட்டுவதற்காக 3mm நீளம் ,3mm அகலம் ,3mm தடிப்பம் பயன்படுத்தப்பட்டது. இவ் வெட்டும் முறை

   1. ஜீலியன் 2. புருனுவாஸ் 3. மஸதுவான் 4. பெய்சான்

9. குழையல் மாவில் மீள் சக்தி உருவாக்கத்திற்கு காரணமான புரதம்

1. கேசின் 2. மயோசின் 3. குளுட்டன் 4. அவிடின்

10. ஸ்ரு செய்தல் சமையல் முறைக்கு உகந்த வெப்பநிலை

1. 225c-300c 2. 110c-120c 3. 100c - 80c 4. 65c - 80c

11. வளர்ந்த ஒருவரின் நாளாந்த அயடீன் தேவை

1. 150 மைக்.கிராம் 2. 180 மைக்.கிராம் 3. 200 மைக்.கிராம் 4. 280மைக்.கிராம்

12. இலங்கையிலுள்ள சுகதேகி ஒருவருக்கு காணப்பட வேண்டிய உடற்திணிவுச் சுட்டி

1. 14.5- 18.5 2. 15.6 -20.0 3. 18.5- 24.9 4. 25.5 -30.0

13. சமிபாட்டுக்கு உதவும் சுரப்பி **அல்லாதது.**

1. உமிழ்நீர்சுரப்பி 2. சதையக்கான் 3. பித்தப்பை 4. ஈரல்

14. தாயின் குருதி உற்பத்திக்கும் , ஹிமோகுளோபின் உற்பத்திக்கும், கருவின் ஈரலில் இரும்பை சேமிக்கவும் அவசியமான கனியுப்பு

1. சோடியம் 2. அயடீன் 3. கல்சியம் 4. இரும்பு

15. உணவுக் கூம்பகத்தின் அளவீட்டு அடிப்படையில், பாலும் பாலுற்பத்திகளும் உள்ளெடுக்க வேண்டிய அளவு

1. 2 -3 2. 1 -2 3. 3 -4 4. 6 -12

16. ஒரு வயதாகும் போது, குழந்தையின் பிறப்பு நிறை எத்தனை மடங்காகும்.

1. 2 மடங்கு 2. 3 மடங்கு 3. 4 மடங்கு 4. 6 மடங்கு

17. விசேட போசணைத் தேவையுடைய பருவங்களில், அடிப்படை அனுசேப வீதம் (BMR) குறைந்தபருவம்.

1. வயோதிபப்பருவம் 2. கர்ப்பிணிப்பருவம் 3. கட்டிளம்பருவம் 4. குழந்தைப்பருவம்

18. பின்கட்டிளம் பருவ வயதெல்லை.

1. 10- 12 வயது 2. 13- 14 வயது 3. 15- 16 வயது 4. 17- 19 வயது

19. கட்டிளப்பருவ பிள்ளையின் உளவிருத்தியைக் வெளிக்காட்டும் இலட்சணங்களில் ஒன்று

1. ஆக்கத்திறன் 2. சீரற்ற உடலமைப்பு 3. வீரவணக்கம் 4. கோபாவேசம்.

20. .பின்வரும் கூற்றுக்களில் சரியானது

1. கட்டிளம் பருவ பாலியல்புகள் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது

2. கர்ப்பிணிப்பருவம் எய்துவதற்கு பொருத்தமான வயதெல்லை 20 -25 ஆகும்.

3. இனப்பெருக்க ஓமோனைக் கட்டுப்படுத்துவது பியூட்டரி சுரப்பி.

4. விந்து உற்பத்தியும் சேமிப்பும் நடைபெறுவது விதைப்பை மூலமாகும்.

21. முற்பிரசவவிருத்திப் பருவத்தில், 14நாள் - 2 மாதம் வரையான காலப்பகுதி

1. சூல்பருவம் 2. நுகப்பருவம் 3. முதிர்மூலவுருப்பருவம் 4. முளையப்பருவம்

22. கர்ப்பகாலத்தில் ஏற்படக் கூடிய சிறுகோளாறு

1. உயர்குருதியமுக்கம் 2. மலச்சிக்கல் 3. தாயின் வயது 4. சமூக நோய்

23. கருவளக் காலம் எனக் கருதப்படுவது

1. மாதவிடாய் சக்கரத்தின் 1 - 4 ம் நாள் வரை.

2. மாதவிடாய் சக்கரத்தின் 5 - 6 ம் நாள் வரை.

3 .மாதவிடாய் சக்கரத்தின் 7 - 21ம் நாள் வரை.

4. மாதவிடாய் சக்கரத்தின் 10 -20 ம் நாள் வரை.

24. கர்ப்பிணித்தாயில் , எந்நோய் தொற்றை அறிய VDRL பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

1. சிபிலிசு 2. நீரிழிவு 3. எயிட்ஸ் 4. புற்றுநோய்

25. குழந்தைப்பருவத்தில் உதவியின்றி உட்காரும் காலம்

1. 1 -2 மாதம் 2. 3 -4 மாதம் 3. 4 -5 மாதம் 4. 7 - 8 மாதம்

26. MMR வக்சின் -2 வது தடவை வழங்கப்படும் வயது

1. 6 மாத முடிவில் 2. 1 வருட இறுதியில் 3. 3 வருட இறுதியில் 4. 5 வருட இறுதியில்

27. பிணியாய் நிலையத்தில் தாய்க்கு வழங்கப்படும் போசணைப்பொருட்கள் அடங்கிய மாத்திரைகள்

1. போலிக்கமிலம் , விற்றமின் E 2. பெரஸ்சல்பேற்று, விற்றமின் C

3. பெரஸ்சல்பேற்று, விற்றமின் A 4. கல்சியம், விற்றமின் B

28. ஆக்கம் ஒன்றை ஆக்க பயன்படும் வெல்கோடேப் , இரேந்தை , பொலிபில் என்பன பின்வருவனவற்றில் எத்தொகுதியில் அடங்கும்

1. பொறி 2. கருவி 3. பொருள் 4. உபகரணம்

29. 10 × 12 cm அளவுள்ளதும் 12× 12cm அளவுள்ள துணித்துண்டுகளைப் பாவித்து தைக்கும் தையல்கள் முறையே

1. பெருநூலோடி, பொருத்து 2. நுட்பத்தையல், அலங்காரத்தையல்

3. விஸ்பம், ஒடுக்க மடிப்பு 4. அடிப்படை ,அலங்காரத்தையல்

30. இரு துணிகளை இணைக்கவும் , இழையோடவும் , குவில்ட் தைக்கவும், அலங்காரத் தையலாகவும் அமையும் அடிப்படைத்தையல்

1. பெருநூலோடல் 2. சிறுநூலோடல் 3. சோம் 4. விஸ்பம்

31. எயர்டெக்ஸ் ஜாவா, கன்வஸ் , அய்டா போன்ற துணிகளில் தைக்கும் அலங்காரத்தையல்

1. சங்கிலித் தையல் 2. நரம்புத் தையல்

3. வெட்டுக்குத்துத் தையல் 4. கம்பளித் தையல்

32. ஊசியில் நூலைப் பல தடைவ சுற்றித் தைக்கும் தையல் வகை

1. நரம்புத் தையல் 2. சங்கிலித் தையல் 3. பிரான்சிய முடிச்சு 4. அடுக்கு நாணயவுருத் தையல்

33. திறப்புக்களை மூடுவதற்கு பயன்படும் நுட்பமுறைகளில் **அல்லாதது**

1. சுருக்குப் பட்டிபிடித்தல் 2. அமுக்கத் தெறி பிடித்தல்

3. இணைப்பி பிடித்தல் 4. தெறியும் தெறியோட்டையும்

34. வலமிருந்து இடமாக ஆரம்பித்து முடிவில் வெளிப்பக்கம் தெரியாதவாறு இறுதியில் 2 புள்ளடி வடிவில் தைக்கும் தையல்

1.விஸ்பம் 2. சிறுநூலோடி 3. சோம் 4. பெருநூலோடி

35. குழந்தை ஆடை தைக்கும் ஒழுங்கு

1. தோள், கழுத்து, திறப்பு, கைக்குழைச்சு, கீழ்விளிம்பு

2. தோள், திறப்பு, கைக்குழைச்சு, கழுத்து, கீழ்விளிம்பு

3. கழுத்து, திறப்பு, தோள், கைக்குழைச்சு, கீழ்விளிம்பு

4. திறப்பு, கழுத்து, தோள், கைக்குழைச்சு, கீழ் விளிம்பு

36. கருக்குடும்ப அங்கத்தவரின் தொடர்புகள் பற்றிக் கருத்துக் கூறிய மானிடவியலாளர்

1. பவலோசி 2. G.P. மார்டெக் 3. கொக் 4. கதளின்கப்

37. தளத்திட்டத்தை வரையும் போது மீற்றர் சென்றிமீற்றரில் குறிப்பிடப்படுவது

1. அங்குல முறை 2. பார் முறை 3. இம்ரியல் முறை 4. மெற்றிக் முறை

38. அழகான, மகிழ்ச்சியான, அமைதியான மனங்கள், நுண்ணிய, நெகிழும் தன்மையுடைய கோடு

1. வளை கோடு 2. கிடைக் கோடு 3. நிலைக்குத்துக் கோடு 4. நெளி கோடு

39. ஒரு நபரின் மனதை உடனடியாக கவரும் வகையில் யாதாயினும் ஒரு இடத்தை முதன்மைப்படுத்தும் இயல்பு

1. சந்தம் 2. உறுத்தலிசைவு 3. சமநிலை 4. விகிதசமம்

40. வர்ணத்தின் பெறுமானத்தை / பெறுமதியைக் காட்டும் கருவி

1. நிறமானி 2. மழைமானி 3.பாகைமானி 4. வெப்பமானி

ளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கி

**கல்வி அமைச்சு**

| 85 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

| மனைப் பொருளியல் - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

### மனைப் பொருளியல் - I

**அறிவுறுத்தல்கள்**

முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

1. பின்வரும் நிகழ்வை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

குறித்த ஒரு பாடசாலையில் மனைப்பொருளியல் பாட ஆசிரியரால் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது. அதில் மனைமுகாமை, உணவும் போசணையும், குழந்தை விருத்தி, மற்றும் புடவையும் உடையமைத்தலும் தொகுதியாக பிரிக்கக்கட்டு மாணவர்கள் முன்வைப்புச் செய்தனர். அதில் தரம் 10 ,11 மாணவர்கள் வீட்டு மாதிரியமைப்பு இதளத்திட்ட அமைப்பு, வீட்டு அலங்காரம், உணவும் செய்முறையும், விற்பனையும் மற்றும் தையல் முறை ,மணைத்துணையணியாக்கம் குழந்தை பராமரிப்பு பற்றியும் செயன்முறையாகவும் முன்வைப்பு செய்து பார்வையாளரிடம் பாராட்டும் பெற்றனர்.

i. கட்டிளம் பருவத்தினருக்கு தேவையான விசேட போசணைகள் எவை?

ii. கட்டிளம் பருவத்தினருக்கு பாடசாலைக்கு எடுத்துச் செல்லக் கூடிய உணவைத் திட்டமிடுக?

iii. மேற்குறித்த கண்காட்சியில் வைக்கப்பட்ட உணவில் பயன்படுத்தப்பட்ட நற்காப்பு பேணிகள் 2 தருக?

iv. இக் கண்காட்சியைச் சிறப்பாக திட்டமிட பயன்படுத்தப்பட்ட முகாமைத்துவ படிமுறைகள் எவை?

v. மனை மாதிரி பல தயாரித்துள்ளனர். அதில் உச்ச பயன்பெறும் இடச்சிக்கன உபகரணம் நான்கு தருக.

vi. கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட குழந்தை ஆடையின் இயல்புகள் 4 தருக?

vii. வரவேற்பறைக்கு பொருத்தமான இல்லத்துணையணிகள் 4 தருக?

viii. பெண்ணின் இனப்பெருக்க ஓமோன்கள் எவை?

ix. கட்டிளம்பருவ சமூகவிருத்திச் செயற்பாடுகள் 2 தருக?

x. கர்ப்பிணித்தாய் பிணியாய் நிலையத்தில் பெறும் செயற்பாடுகள் 2 தருக?

(10 ×2=20 புள்ளிகள்)

**2.**

i. தாவர நார்களைத் தருக?
ii. குழந்தை ஆடைக்கு பருத்தி நார் சிறந்தது. இக் கூற்றினை ஆராய்க?
iii. துணை அலங்காரப் பொருட்களை ஆக்க தையல் நுட்பம் கையாளும் போது கவனத்தில் கொள்ளப்படும் விடயம் எவை?

(3+3+4=10 புள்ளிகள்)

**3.**

i. உணவு சமைத்தலில் வெப்பம் கடத்தப்படும் பிரதான முறைகள் எவை?
ii. மேற்கூறப்பட்ட முறைகளில் ஒன்றை விளக்குக?
iii.
a. சீனி, மதுசாரம் தொழிற்படக் கூடிய நுண்ணுயிர் ?
b. மேற்கூறப்பட்ட நுண்ணுயிர்களின் தொழிற்பாடு 2 தருக?
c. உணவில் காணப்படும் பூஞ்சணவகைகள் எவை?

(3+3+2+1+1=10 புள்ளிகள்)

**4.**

i. உணவின் தரப்பண்புகள் எவை?
ii. உணவு பரிமாறும் போது உணவு பரிமாறுபவரால் பின்பற்ற வேண்டிய விடயங்கள் 3 தருக?
iii. நுகர்வோரின் அறியாமையால் உணவின் தரப்பண்புகள் இழக்கப்படும் சந்தர்ப்பங்கள் 4 தருக?

(3+3+4=10 புள்ளிகள்)

**5.**

i. குடும்பத்தின் பிரதான கட்டங்கள் எவை?
ii. வீட்டுகதவு , ஜன்னலுக்கு மேலாக காற்று கிடைக்கும் வழிகள் 3 தருக?
iii.
a. பௌதீகமல்லாத வளங்கள் எவை?
b. மேற்குறித்த வளங்களில் ஒன்றின் முக்கியத்துவம் யாது?

(3+3+1+3=10 புள்ளிகள்)

**6.**

i. கட்டிளம் பருவத்தினருக்கு இனப்பெருக்க சுகாதாரத்தின் முக்கியத்துவம் யாது?
ii. கட்டிளம் பருவ உடல் வளர்ச்சி செயற்பாடுகள் 3 தருக
iii. சிசுவின் எளிய தெறிவினைச் செயற்பாடுகள் எவை?

(3+3+4=10 புள்ளிகள்)

**7.**

i. தாய்ப்பால் ஊட்டுவதன் நன்மைகள் 3 தருக ?
ii. சிறுகுறிப்பு
a. இனப்பெருக்க சுகாதாரம் பேணாமையால் கட்டிளம் பருவத்தினருக்கு ஏற்படும் பாதிப்புக்கள்.
b. முற்பிரசவ விருத்தி கட்டங்கள்

(3+3.5+3.5= 10புள்ளிகள்)